# ஸ்ரீ சரஸ்வதி சங்கம்
(ஸ்தாபிதம் 1922.)

# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை
(ஸ்தாபிதம் 1933.)

## சங்கம் 18-ம் ஆண்டு
## வித்தியாசாலை 8-ம் ஆண்டு
## அறிக்கைகள்

அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்—
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!

மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்!
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்!
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!

விக்கிரம ஆண்டு சித்திரைத்திங்கள்
28-ம் நாள்.

10-5-1940.

சிறந்தது! மலிவு!!

சீக்கிரமாகவும் லாபகரமாகவும்

கஷ்டமில்லாமலும் தங்கள்

# ஆடைகளை

சுத்தம்செய்வது

எது?

24

# தினமணி

வாஷிங்

# சோப்

24

இன்றே வாங்கி லாபமடையுங்கள்

---

தயாரிப்பவர்கள்:—

மதருஸ்

இண்டோ சோப் ஒர்க்ஸ் லிமிடெட்

மைலாப்பூர் :: :: மதருஸ்



புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் புதிய கட்டிடத் திறப்புவிழா. 24—4—1939.



புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தில் உருவப்படங்கள் திறப்பு விழா 11—9—1939.

ஓம்
வந்தேமாதரம்.

## புதுவயல்

# ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்

## பதினெட்டாவதாண்டு

# அறிக்கை.

அன்பிற் சிறந்த அவைத் தலைவரவர்களே!

சேந்தமிழ்ச் செல்வர்களே!!

செல்விகளே!!!

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் நமது சங்கம் துந்துபி ஆண்டு ஆடித்திங்கள் 9-ம் நாள் (24-7-1922) நிறுவப்பெற்று இதன் முக்கிய கொள்கைகளான இளைஞர் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, கதர் அபிவிர்த்தி, ஜீவகாருண்யம் ஆகியவற்றின் வளர்ச்சிகருதி பதினெட்டு ஆண்டுகளாகத் தொண்டாற்றி வந்துள்ள நமது சங்கத்திற்கு இன்று பத்தொன்பதாம் ஆண்டு ஆரம்பமாகின்றது.

| | | |
|---|---|---|
| தலைவர், | திருவாளர், | வீர. சோலையப்பன்.<br>பிரமாதி௵ மாசி௴ 16௳ வரை |
| ,, | ,, | பழ. முத்துவள்ளியப்பன். |
| காரியதரிசி, | ,, | மே. சிதம்பரம். |
| உபகாரியதரிசி, | ,, | சே. பழநியப்பன். |

## அங்கத்தினர்கள்.

1 திருவாளர். சா. சிதம்பரம் செட்டியார் (நத்தலின்)
2 „ பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார் (சயிலா)
3 „ சித. இராமசாமி செட்டியார்
4 „ வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார்
5 „ வீர. பழனியப்ப செட்டியார் (டேரியா)
6 „ ராம. சுப. அடைக்கப்ப செட்டியார் (பினங்கு)
7 „ வீர. சோலையப்ப செட்டியார் (டேரியா)
8 „ வீர. பழ. விருத்தகிரி செட்டியார் (பினங்கு)
9 „ பழ. ப. ப. வீர. வீரப்ப செட்டியார்
10 „ மெ. கரு. அண்ணாமலை செட்டியார் (பினங்கு)
11 „ அ. நாகப்ப செட்டியார்
12 „ அ. சு. பழ. சு. சோம. இராமநாதன் செட்டியார் (மீன்லா)
13 „ சா. காசிச்செட்டியார்
14 „ மு. மு. அழ. அழகப்ப செட்டியார்
15 „ பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார்
16 „ பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார்
17 „ அரு. ப. மு. வீர. அண்ணாமலை செட்டியார் (கிமந்தான்)
18 „ எ. ராம. வீர. பழ. முத்துவள்ளியப்ப செட்டியார்
19 „ வீர. இராமநாதன் செட்டியார்
20 „ கா. குழ. ராம. வீர. இராமசாமி செட்டியார்
21 „ லெ. இராமநாதன் செட்டியார் (பிடூ)
22 „ பெ. க. வீர. நாராயணன் செட்டியார்
23 „ வீர. அழ. அழகப்ப செட்டியார்
24 „ V. இராமசாமி செட்டியார்
25 „ அ. அழ. அண்ணாமலை செட்டியார்
26 „ சே. பழனியப்ப செட்டியார்
27 „ ப. வடு. பெரி. ராம. கா. அருணாசலம் செட்டியார்
28 „ மெ. நடேசன் செட்டியார் (இக்தட்டா)
29 „ சோம. தியாகராஜன் செட்டியார்
30 „ சுப. வீரப்ப செட்டியார் (பொந்தியாங்கிச்சு)

| | | |
|---|---|---|
| 31 | ,, | பழ. ராம. அருணாசலம் செட்டியார் |
| 32 | ,, | மு. ராம. இராமநாதன் செட்டியார் |
| 33 | ,, | எ. அ. ப. வீர. பழநியப்ப செட்டியார் (ரத்தப் பாஞ்சான்) |
| 34 | ,, | உ. ராம. பெ. ராம. இராமநாதன் செட்டியார் |
| 35 | ,, | சித. ராம. குமரப்ப செட்டியார் (ஈந்தட்டா) |
| 36 | ,, | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் |
| 37 | ,, | செ. சு. கதி. சுப்பையா செட்டியார் (குப்பிங்கான்) |
| 38 | ,, | மெ. சிதம்பரம் செட்டியார் |
| 39 | ,, | அ. மு. வீர. கதி. வீரப்ப செட்டியார் (ரெங்கோன்) |
| 40 | ,, | கு. செ. மு. பெரி. காசிவிஸ்வநாதன் செட்டியார் |
| 41 | ,, | பெ. ப. வி. வீர. பழ. வீரப்ப செட்டியார் |
| 42 | ,, | சு. வீர. மெ. வீரப்ப செட்டியார் |
| 43 | ,, | மு. ராம. சாத. சாத்தப்ப செட்டியார் |
| 44 | ,, | மு. உ. வீரப்ப செட்டியார் (பயிஞ்சலோ) |
| 45 | ,, | கு. ராம. வீரப்ப செட்டியார் (சுப்போ) |
| 46 | ,, | ப. வடு. வி. நா. வீரப்ப செட்டியார் |
| 47 | ,, | அ. இராமசாமி செட்டியார் |
| 48 | ,, | சுப. சித. லெட்சுமணன் செட்டியார் (மோரி). |
| 49 | ,, | லெ. வீரப்ப செட்டியார் (மூவார்) |
| 50 | ,, | மெ. சொ. வீரப்ப செட்டியார் |
| 51 | ,, | வீர. சுப. சு. கா. முத்துச் செட்டியார் |
| 52 | ,, | பெ. ப. வி. பழ. இராமசாமி செட்டியார் |
| 53 | ,, | சி. வீர. ராம. வீரப்ப செட்டியார் (சென்னை) |
| 54 | ,, | அ. வயி. ராம. சின்னக்கருப்பன் செட்டியார் |
| 55 | ,, | ப. உ. கு. உ. அண்ணாமலை செட்டியார் (கிள்ளான்) |
| 56 | ,, | அரு. உ. வீர. அழகப்ப செட்டியார் (மீன்லா) |
| 57 | ,, | மெ. வீர. வெ. நடேசன் செட்டியார் |
| 58 | ,, | ராம. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியார் |
| 59 | ,, | ராம. அழ. கிருஷ்ணப்ப செட்டியார் |
| 60 | ,, | சு. பழ. ராம. இராமசாமி செட்டியார் |
| 61 | ,, | லெ.ராம.லெ. லெட்சுமணன்செட்டியார் (மீச்சோ) |
| 62 | ,, | பெரி. நா. வெ. வெங்கிடாசலம் செட்டியார் |
| 63 | ,, | அரு. பழ. அரு. பழநியப்ப செட்டியார் |
| 64 | ,, | சுப. கரு. ராம. சுப்பிரமணியன் செட்டியார் |

65 ,, கறி. ராம. வீரப்ப செட்டியார்
66 ,, ராம. சுப்பிரமணியன் செட்டியார்
67 ,, சுப. நாராயணன் செட்டியார்
68 ,, மு. வீனதீர்த்தான் செட்டியார் (சயிலா)
69 ,, வயி. வயிரவன் செட்டியார்
70 ,, ராம. முத்துக்கருப்பன் செட்டியார்
71 ,, வீர. இராமநாதன் செட்டியார் M. Sc.
72 ,, பழ. வீர. பழநியப்ப செட்டியார்
73 ,, அரு. வீர. சோம. வீரப்ப செட்டியார்

கோட்டையூர்

74 ,, அழ. இராமசாமி செட்டியார்.

## கௌரவ அங்கத்தினர்கள்.

திருவாளர் எ. பெரி. வீர. பெரியணன் செட்டியார்
,, ப. வடு. பெரி. வீர. ராம. வீரப்ப செட்டியார்
,, கு. வீர. பழ. அ. பழநியப்ப செட்டியார்
,, ப. வடு. பெரி. ராம. காசிச் செட்டியார்
,, அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார் (மேமந்தான்)
,, எஸ். பி. வீரப்பா அவர்கள்
,, சு. பி. வீர. பிச்சப்ப செட்டியார்
,, வெ. பெரி. வீர. சோமசுந்தரம் செட்டியார்
,, சி. ராம. சொ. சு. சொக்கலிங்கம் செட்டியார் (கண்டனூர்)
,, பண்டிட் ரெத்தினம் அவர்கள் (கண்டனூர்)
,, வள்ளியம்மை-அண்ணாமலை அவர்கள் (கோட்டையூர்)
,, அ. கருப்பன் செட்டியார் (கோட்டையூர்)
,, ஆவி. லெ. அருணாசலம் செட்டியார் (காரைக்குடி)
,, ராய. சொக்கலிங்கம் அவர்கள் ("ஊழியன்" ஆசிரியர், காரைக்குடி)
,, சொ. முருகப்பா அவர்கள் ("குமரன்" ஆசிரியர், காரைக்குடி)
,, எ. என். சர்மா அவர்கள் ("செட்டிநாடு" ஆசிரியர், காரைக்குடி)
,, தி. ம. நடராஜன் அவர்கள் ("விஸ்வபந்து" ஆசிரியர், காரைக்குடி)

## அபிமானிகள்.

திருவாளர் அ. ப. சி. மு. சின்னையா செட்டியார்
,, பெரி. அரு. நாகப்பசெட்டியார்
,, பழ. சு. பழ. பழநியப்ப செட்டியார்
,, பழ. மு. பழ. வீர. முருகப்பசெட்டியார்
,, வீர. கும. குமாரப்பசெட்டியார்
,, அ. ப. சி. வீர. சின்னையா செட்டியார்
,, சி. வீர. சோம. வீரப்ப செட்டியார்
,, சொ. அரு. சு. இராமசாமி செட்டியார்
,, கு. லெ. லெட்சுமணன் செட்டியார் (தோங்குவா)
,, பெரி. அரு. வீரப்ப செட்டியார் (சயிலா)
,, அழ. கு. சித. கும. சுப்பிரமணியன் செட்டியார்
,, சுப. சித. சுப்பிரமணியன் செட்டியார்
,, ப. மு. நா. முத்துக்கருப்பன் செட்டியார்
,, செ. மெ. செ. சின்னையா செட்டியார்
,, ப. செ. பழ. சேதுராமன் செட்டியார்
,, அ. மு. வீர. சா. வீரப்ப செட்டியார்
,, ப. செ. பழ. வீரப்ப செட்டியார்

## தேசீயக் கொடியேற்று விழா.

பிரமாதி ஆண்டு சித்திரைத்திங்கள் 10-ம் நாள் (23—4—39) காலை 9-30 மணிக்கு ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் புதிய கட்டிடத்தில் சென்னை அரசாங்கத்தின் விளம்பர இலாகா மந்திரி கனம் S. ராமனதன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்கள். ச. வி. மாணவ மாணவிகளால் கொடி வணக்கக் கீதம் பாடிய பின்னர் மந்திரி அவர்களுக்கு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பெற்றது. ஷை விழா பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார், ப. செ. பழ. வீரப்ப செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியால் நடைபெற்றது.

## பதினேழாவதாண்டு விழா.

பிரமாதி ஆண்டு சித்திரைத்திங்கள் 11-ம் நாள் (24—4—39) திங்கட்கிழமை மாலையில் சங்கத்தின் பதினேழாவதாண்டுவிழாவும், ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் ஏழாவதாண்டு விழாவும் தமிழ்ப் பேரறிஞரும், திருக்குறள் குமரேச வெண்பா ஆசிரியருமான தாத்தாக்குடி கவிராஜ பண்டிதர். ஜெகவீர பாண்டியனர் அவர்கள் தலைமையில் காரைக்குடி வித்துவான் அரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் "கம்பன் போற்றுங்கவி" என்பதுபற்றியும், காரைக்குடி டாக்டர் R. பிம்சிங் அவர்கள் "சுகாதாரம்" என்பதுபற்றியும், ஆத்தங்குடி சுப்பராமய்யாவர்கள் "கல்வி" என்பது பற்றியும் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவ மாணவிகளால் பாட்டு, பேச்சு, நடிப்பு முதலியவைகளும் நடைபெற்று விழாவும் இனிது நிறைவெய்தியது.

---

## விசேடக் கூட்டம்.

பிரமாதி ஆண்டு சித்திரைத்திங்கள் 12-ம் நாள் (25-4-39) செவ்வாய்க்கிழமை மாலை 5-மணிக்கு திரு. ஜெகவீரபாண்டியனர் அவர்கள் "தசரதன் தன்மையும் கைகேயி வன்மையும்" என்பது பற்றியும் ச. வி. மாணவ மாணவிகளால் பாட்டுக்களும் நடைபெற்று கூட்டம் இனிது நிறைவெய்தியது.

---

## மாதக் கூட்டங்கள்.

பிரமாதி ஆண்டு வைகாசித்திங்கள் முதல் பங்குனித்திங்கள் வரை பல அறிஞர்கள் தலைமையில் அன்பர்கள் பலரின் சொற்பொழிவுகளுடனும், ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவ மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்புகளுடனும் மாதக்கூட்டங்கள் பதினொன்று நடைபெற்றன.

---

## ஜீவகாருண்யப் பிரசாரம்.

சாக்கை ஸ்ரீ உய்யவந்தம்மன் உற்சவத்தில் நடைபெறும் பலிப்பொங்கலை நிறுத்துவான்வேண்டி சங்கத்தின் சார்பில் பிரமாதி ஆண்டு, ஆனித்திங்கள் 6-ம் நாள் இரவு 8 மணிக்கு சங்கத்தின்

அங்கத்தினர்களாலும், வித்தியாசாலை ஆசிரியர்கள், மாணவர்களாலும் பிள்ளையார் கோவில் ஊரணியின் கீழ்கரையில் பிரசங்கங்கள் நடாத்தப்பெற்று துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பெற்றன.

## பாராட்டுக் கூட்டம்.

பிரமாதி ஆண்டு ஆனித்திங்கள் 12-ம் நாள் (26—6—39) திங்கட்கிழமை காலை 8-45 மணிக்கு நமது சங்கத்தின் அங்கத்தினரான உயர் திரு. VR. இராமநாதன், M. Sc. அவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சி சம்பந்தமாக (Science) கல்வி பயில்வதற்கு காசி ஹிந்து சர்வகலாசாலைக்கு (Benares Hindu Univercity) பிரயாணமாவது குறித்து பல அன்பர்கள் அன்னாவர்களின் கல்வித்திறமையைப்பற்றி பாராட்டுரைகள் பகன்றார்கள்.

## அனுதாபத்தீர்மானம்.

இந்நகர் தமிழ் வித்துவானும், நமது சங்கத்தின் கௌரவ அங்கத்தினருமான திரு. நா. அ. ச. சண்முகம் செட்டியாரவர்கள் மரணமடைந்ததைக் குறித்து அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

## 3-வது மாதக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம்

பெண்களுக்கென தனியாக போர்டு பெண்பாடசாலை உள்ள ஊர்களில் ஆண்கள் படிக்கும் பாடசாலைகளில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடாதென சென்னை மாகாண கல்வி இலாகா அதிகாரியால் வெளியிடப் பெற்றிருக்கும் உத்தரவு இந்தப்பகுதியிலுள்ள பெற்றோர்களுக்கு மிக அசௌகரியமாகவும், ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து படிப்பதே சிலாக்கியமென்றும் கருதுகிறார்கள். ஆகையினால் மேற்படி உத்தரவை ரத்துச் செய்யவேண்டுமாய் இச்சங்கம் சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறதென்றும் இத்தீர்மானத்தின் நகலை கனம் கல்வி மந்திரி அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

## உருவப்படங்கள் திறப்புவிழா.

பிரமாதி ஆண்டு ஆவணித்திங்கள் 26-ம் நாள் (11—9—39) திருவாளர்கள் எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார், பெரி.வீர.ராம. பெரியணன் செட்டியார், பெ. ப. வி. அரு. இராம்சாமிசெட்டியார் ஆகியவர்களின் உருவப்படங்களை காரைக்குடி முனிசிபல் கமிஷனர் திருவாளர் T. புருஷோத்தமன் அவர்கள் திறந்து வைத்தார்கள். அன்று மாலை சிற்றுண்டி விருந்தும் நடைபெற்றது.

ஷடி விழாவில், கானடுகாத்தான், க.வெ. சித.வெ. வெங்கடாசலம் செட்டியார் அவர்களும், கோட்டையூர், வயி. அரு. சுப்பையா செட்டியார் அவர்களும், வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார் அவர்களும், SP. வீரப்பா அவர்களும், வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர், M. லெட்சுமி நாராயண ஐயர், B. A., L. T. அவர்களும் பாராட்டுரைகள் கூறினார்கள்.

ஷடி திறப்புவிழாவிற்கு நன்கொடை உதவியவர்கள் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை ரூ. 53-ம், சுப. நா. ரூ. 5-ம், வீர. பழ. வி. ரூ. 5-ம், அள. குப. கும. ராம. ரூ. 5-ம், மெ. சித. ரூ. 5-ம், பெ. ப. வி. பழ. ராம. ரூ. 5-ம், எ. பெரி. வீர. சோ. ரூ. 5-ம், அ. ப. சி. வீர. சி. ரூ. 5-ம், S P. வீரப்பா ரூ. 5-ம், பழ. மு. பழ. வீர. முரு. ரூ. 5-ம், மெ. வீர. வெ. ந. ரூ. 5-ம், சித. ராம. ரூ. 4-ம், பெரி. அரு. பெரி. ரூ. 4-ம், அ. சு. பழ. வீர. ராம. ரூ. 3-ம், சே. பழ. ரூ. 3-ம், ப. வடு. பெரி. வீர. ரூ. 3-ம், சு. வீர. மெ. வீர. ரூ. 3-ம், லெ. ராம. ரூ. 3-ம், பழ. மு. ரூ. 3-ம், மு. ராம. சாத. ரூ. 3-ம், ப. வடு. வி. நா. வீர. ரூ. 3-ம், ப. செ. பழ. ரூ. 2-ம், அ. ராம. ரூ. 2-ம், மெ. வீர. மெ. ந. ரூ. 2-ம், அள. கு. சித. கும. சுப. ரூ. 2-ம், மு. மு. ராம. ரூ. 2-ம், செ. வ. வ. ரூ. 2-ம், நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்கட்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## காந்தி ஜெயந்தி விழா.

பிரமாதி ஆண்டு புரட்டாசித் திங்கள் 16-ம் நாள் மாலையில் மஹாத்மா காந்தியடிகளின் திருவுருவப் படத்தை வண்டியில் வைத்து அலங்கரித்து சங்கத்திலிருந்து மேளவாத்திய கோஷத்துடனும் ச. வி. மாணவ மாணவிகளின் தேசிய கீதத்துடனும்

ஊர்வலம் வந்ததும் தேவகோட்டை நகரசபை அங்கத்தினரும், தேசபக்தருமாகிய திரு. பொ. திருகூடசுந்தரம்பிள்ளை M.A., B.L. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஷை விழா திருவாளர்கள் சா. சிதம்பரம் செட்டியார், பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார், சித. இராமசாமி செட்டியார், சோம. இராமசாமி செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியால் நடைபெற்றது.

## கலைமகள் விழா.

பிரமாதி ஆண்டு ஐப்பசித்திங்கள் 4-ம் நாள் வெள்ளியினுல் செய்யப்பெற்ற ஸ்ரீ சரஸ்வதி தேவியின் விக்கிரகத்தை தேரில் வைத்து அலங்கரித்து மேளவாத்திய கோஷத்துடனும், ச. வி. மாணவ மாணவிகளின் தேசிய கீதத்துடனும் ஸ்ரீ சரஸ்வதி தேவியின் ரதாரோகண விழா ஆரம்பமாகி நேரு சதுக்கத்திற்கு வந்ததும் வித்தியாசாலை மாணவிகளால் கோலாட்டம், கும்மி முதலியவைகளும், மாணவர்களால் இசைக்கேற்ப தேகப்பயிற்சி நடைபெற்றதும் பவனிவந்து சங்கத்தில் பூஜை நடாத்தி வந்திருந்தோர் அனைவருக்கும் வினியோகங்கள் வழங்க விழா இனிதுநிறைவெய்தியது.

ஷை விழா திருவாளர்கள் வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார், எ. ராம. வீர. பழ. முத்துவள்ளியப்பசெட்டியார், எ. பெரி. வீர. சோலையப்ப செட்டியார், சித. ராம. குமரப்ப செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியினுல் நடைபெற்றது.

## வ. உ. சிதம்பரம் பிள்ளை தினம்.

பிரமாதி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 3-ம் நாள் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் தலைமையில் காலஞ்சென்ற தூத்துக்குடி தேசபக்தர் திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்களின் தினம் கொண்டாடப்பெற்றது.

## நன்கொடை.

மெ. வீர. மெ. ந. மகன் மெய்யப்பனுக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப் புதுமையில் ரூ. 5-ம், அரு. வீர. சோம. வீர. வுக்கு நடைபெற்ற திருமணத்தில் ரூ. 5-ம், வீர. பழ. வி. மகன் முருகப்பனுக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப் புதுமையில் ரூ. 5-ம், சித. ராம. மகன் சிதம்பரத்துக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப் புதுமையில் ரூ. 5-ம் நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்கட்கு எங்களது நன்றி உரியதாகுக.

## வாசகசாலை.

இச் சங்கத்தின் சார்பில் வாசகசாலை ஒன்று நடைபெற்று வருகின்றது. அதில் 596 புத்தகங்கள் இருக்கின்றன. தினப்பதிப்பு, வாரப்பதிப்பு, வாரமிருமுறை, மாதப்பதிப்பு ஆகிய பத்திரிகைகள் வரவழைக்கப்பெறுகின்றன. பல அன்பர்கள் வந்து வாசித்து வருகின்றார்கள்.

## பத்திரிகைக்கு நன்கொடை உதவியவர்கள்

| | | |
|---|---|---|
| சுதேசமித்திரன் | தினப்பதிப்பு | சங்கம் |
| ஆனந்த விகடன் | வாரப்பதிப்பு | அ. ராமசாமி செட்டியார்<br>லெ. ராமசாமி செட்டியார் |
| குமரன் | ,, | சங்கம் |
| செட்டிநாடு | ,, | ,, |
| தனவணிகன் | ,, | ,, |
| Fort St. George Gazette Part I-B, Educational | ,, | கோட்டையூர் அள. இராமசாமி செட்டியார் |
| சுதந்திரச்சங்கு | வாரம் இருமுறை | சங்கம் |
| நல்வழி | மாதப் பதிப்பு | அ. நாகப்பசெட்டியார் |
| சில்பஸ்ரீ | ,, | பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் |
| ஜோதி | ,, | மலாயா அன்பர் |
| சித்தாந்தம் | ,, | சங்கம் |
| தமிழ்க்கலை | ,, | ,, |
| செந்தமிழ்ச் செல்வி | ,, | ,, |
| ஆரம்பக்கல்வி | ,, | ,, |
| திருப்புகழமிர்தம் | ,, | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் |


## புத்தகங்கள், சாமான்கள் நன்கொடை உதவியவர்கள்

| | | |
|---|---|---|
| அ. சு. நா. சுப. வள்ளியம்மை ஆச்சி | செம்பு | 2 |
| | பித்தளை விபூதிக் கிண்ணம் | 1 |
| | சிறிய சட்டி | 1 |
| சே. பழநியப்ப செட்டியார் | புத்தகங்கள் | 3 |
| சா. சிதம்பரம் செட்டியார் | ,, | 2 |
| கண்டனூர். நகரத்தார் பிரஸ் | ,, | 1 |
| எ. ராம. வீர. பழ. வீரப்ப செட்டியார் | ,, | 1 |
| சா. காசிச் செட்டியார் | ,, | 2 |
| நா. அ. ச. நாராயணன் செட்டியார் | ,, | 30 |
| வீர. சோலையப்ப செட்டியார் | ,, | 7 |
| SP. வீரப்பா அவர்கள் | ,, | 1 |
| மெ. சிதம்பரம் செட்டியார் | ,, | 2 |
| மு. ப. வீர. நாராயணன் செட்டியார் | ,, | 20 |
| அ. ப. சி. மு. சி., எ. பெரி. வீர. வீர., வீர. பழ. வி., சித. ராம., மெ. சித., சே. பழ., அ. ராம. | ,, | 2 |
| கோட்டையூர். லெ. இராமநாதன் செட்டியார் | ,, | 1 |
| டைியூர் க. வீ. அள. மு. இராமநாதன் செட்டியார் | ,, | 2 |

## புதுவையம். ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் வருடாந்திரக் கணக்கு

பிரமாதி-ஆடு சித்திரை-மீ முதல் பங்குனி-மீ வரை.

| விபரம் | | வரவு | | | பற்று | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | அ | பை | ரூ | அ | பை |
| முன் குறிப்பு இருப்பு | ... | 38 | 12 | 0 | | | |
| ஸ்ரீ விநாயகர் வரவு | .... | 0 | 2 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு | .... | 0 | 2 | 0 | | | |
| ஆதாய வரவு | .... | 0 | 2 | 0 | | | |
| நன்கொடை வரவு | ... | 167 | 0 | 0 | | | |
| சந்தா வரவு | ... | 195 | 0 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை வரவு | .... | 100 | 0 | 0 | | | |
| சாமான் கொள்முதல் பற்று | .... | | | | 4 | 7 | 0 |
| புத்தகம் கொள்முதல் பற்று | .... | | | | 54 | 4 | 0 |
| மாதக் கூட்டச் செலவு | .... | | | | 13 | 3 | 9 |
| விசேடக் கூட்டச் செலவு | .... | | | | 1 | 11 | 6 |
| சில்லரைச் செலவு | .... | | | | 180 | 7 | 6 |
| ஆண்டுவிழாக் கணக்கு பற்று | .... | | | | 213 | 4 | 3 |
| வாசகசாலை பற்று | .... | | | | 28 | 0 | 3 |
| இருப்பு | .... | | | | 5 | 11 | 9 |
| | ஆக ரூ. | 501 | 2 | 0 | 501 | 2 | 0 |



புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் ஏழாவதாண்டு ஆசிரியர்கள், மாணவ மாணவிகள்.

உ
சிவமயம்.

# புதுவயல்

# ஸ்ரீசரஸ்வதிவித்தியாசாலையின்

# 8-வது ஆண்டு அறிக்கை.

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் இச் சங்கத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகிய கல்வியை வளர்க்கும்பொருட்டு ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயருடன் ஆங்கிரஸ ஆண்டு தைத்திங்கள் 4-ம் நாள் (16—1—1933) ஆரம்பிக்கப்பெற்று தற்பொழுது எட்டு ஆண்டுகள் நிறைவெய்தி ஒன்பதாம் ஆண்டு ஆரம்பமாகின்றது.

## கல்வி முறை.

சிறுவர் சிறுமியர்களுக்கு தமிழ்க்கல்வி, ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், சுகாதாரம், அரசாங்க முறைநூல், இலக்கணம், இலக்கியம், தேவாரம், சித்திரம் ஆகிய பாடங்களும், கைத்தொழில், தேகாப்பியாசம், பாட்டு, பேச்சு, நடிப்பு, முதலியவைகளும், சிறுமியர்களுக்கு கும்மி, கோலாட்டமும் பயிற்றுவிக்கப்பெறுகின்றன.

Manager & Correspondent
(காரியதரிசி)
திருவாளர், பெ. ப. வி. அரு. இராமசாமிசெட்டியார்.

## ஆசிரியர் மாணவர்

| ஆண்டு | ஆசிரியர் | ஆசிரியை | வகுப்புகள் | மாணவர்கள் | மாணவிகள் | அரசியலார் நன்கொடை |
|---|---|---|---|---|---|---|
| முதலாவது | 2 | 1 | 4 | 28 | 34 | — |
| இரண்டாவது | 3 | 2 | 4 | 40 | 38 | — |
| மூன்றாவது | 5 | 1 | 5 | 40 | 39 | — |
| நான்காவது | 6 | 1 | 6 | 59 | 52 | — |
| ஐந்தாவது | 6 | 1 | 6 | 70 | 63 | — |
| ஆறாவது | 7 | 1 | 6 | 87 | 64 | — |
| ஏழாவது | 8 | .... | 6 | 92 | 68 | ரூ. 373 |
| எட்டாவது | 9 | .... | 6 | 105 | 83 | ரூ. 944 |

## ஆசிரியர்கள்

1. M. லெட்சுமி நாராயண ஐயர் அவர்கள், B. A., L. T., தலைமை ஆசிரியர்.
2. P. பூதலிங்கம் அவர்கள்.
3. S. கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்கள்.
4. R. சுப்பிரமணியம் அவர்கள்.
5. K. நாகசுப்பிரமணியம் அவர்கள்.
6. K. சுப்பையா அவர்கள்.
7. S. கிருஷ்ணய்யங்கார் அவர்கள்
8. S. ஸ்ரீராமு ஐயங்கார் அவர்கள்.
9. T. சிவலோகநாத தேசிகர் அவர்கள். (தேவார ஆசிரியர்)

## புத்தகசாலை.

மாணவர் நூல் நிலையத்தில் கல்வி சம்பந்தமாக 394 புத்தகங்கள் இருக்கின்றன.

---

## உபகரணங்கள்.

மாணவ மாணவிகளின் பயிற்சிக்குரிய நாணயங்கள், பொருட்பாடப் படங்கள், தேசப்படங்கள், குளோப் (Globe), தையல் மிஷின் முதலியனவும் இன்னும் பல உபகரணங்களும் ஆர்மோனியமும் இருக்கின்றன.

---

## புக்ஸ்டால்.

மாணவ மாணவிகளுக்கு வேண்டிய பாடப் புத்தகங்கள், ஸ்டேஷனரி சாமான்கள் முதலியன வித்தியாசாலையின் சார்பில் விற்பனை செய்யப் பெறுகின்றன.

---

## விழாக்கள்.

வருடப்பிறப்புவிழா, திருவள்ளுவர்விழா, விநாயகர் சதுர்த்தி விழா, பாரதிவிழா, காந்திஜெயந்திவிழா, கலைமகள்விழா, கிலிக்கி எடுப்புவிழா, விஜயதசமிவிழா, தைப்பொங்கல்விழா, ஆகியவிழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன.

குறிப்பு:—விநாயகர்சதுர்த்திவிழா, திருவாளர்கள், அ. இராமசாமி செட்டியார், லெ. இராமநாதன் செட்டியார், மெ. சிதம்பரம் செட்டியார், மெ. நடேசன் செட்டியார்.

கிலிக்கி எடுப்பு விழா, திருவாளர். வீர. பழநியப்ப செட்டியார்.

விஜயதசமி விழா, திருவாளர்கள், சே. பழநியப்ப செட்டியார், கா. அருணாசலம் செட்டியார்

ஆகியவர்களின் பொருளுதவியினால் நடைபெற்றன.

## திருமறைப் பணி.

பிரமாதி ஆண்டு ஆனித்திங்கள் 16-ம் நாள் மாலை சாக்கை ஸ்ரீ வீரசேகர உமையாம்பிகைக்கு நடைபெற்ற உற்சவத்தின் 5-வது நாள் தபசுக்காக்ஷி சமயம் வித்தியாசாலை மாணவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரம் பாடப் பெற்றது.

---

## ஆரம்பக் கல்வி தினம்.

பிரமாதி ஆண்டு ஆடித்திங்கள் 15-ம் நாள் (31-7-39) காலையில் ஊர்வலம் வந்து, M. லெட்சுமி நாராயண ஐயர், B. A., L. T. அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

---

## பெற்றோர்கள் சங்கக்கூட்டம்.

பிரமாதி ஆண்டு மாசித்திங்கள் உ௰௭-ம் நாள் (10—3—40) இராமநாதபுரம் ஜில்லாக் கல்வி அதிகாரி, திருவாளர். M. R. சுப்பிரமணிய ஐயர், B. A., L. T. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பிரமாதி ஆண்டு பங்குனித் திங்கள் ௬௰-ம் நாள் (12—4—40) மூணார் ஹைஸ்கூல் ஆசிரியர் திருவாளர் S. சுப்பிரமணிய ஐயர், B. A., L. T. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

## பரீக்ஷை.

இவ்வாண்டில் 6—4—40 முதல் 12—4—40 வரை வருடப் பரீட்சை நடைபெற்றது.

---

## அரசாங்க அங்கீகாரம்.

அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பெற்று பொருள் உதவி (Grand) செய்துவந்த இக்கர் பங்களாஸ்கூல் மானேஜ்மெண்டை 1-7-1938 முதல் ஒப்புக்கொள்ளப்பெற்று ஸ்ரீ சரஸ்வதி வித்தியா சாலை என்ற பெயருக்கு மாற்றி, அரசாங்க கல்வி இலாகா முறைப் படி நடைபெற்று வருகின்றது.

## அரசியலார் நன்கொடை

1939-40-ம் ஆண்டிற்கு அரசியலார் ரூ. 944, நன்கொடை (Grand) உதவியுள்ளார்கள்.

---

## புத்தகங்கள், சாமான்கள் நன்கொடை உதவியவர்கள்

| | | |
|---|---|---|
| கு. வீர. பழ. அ. தெய்வானை ஆச்சி | ஐந்து மூக்கு கற்பூரத்தட்டு | 1 |
| சே. பழநியப்ப செட்டியார் | புத்தகங்கள் | 13 |
| சு. சித. பழ. அழகம்மை ஆச்சி | சிறிய ஜாடி | 1 |
| லெ. இராமநாதன் செட்டியார் | புத்தகங்கள் | 2 |
| அ. இராமசாமி செட்டியார். | பென்சல் திருகும் மிஷின் பெரியது | 1 |
| பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார் | இங்கிலீஷ் டைப்ரைட்டிங் மிஷின் | 1 |
| மெ. சித., சே. பழ. | புத்தகம் | 1 |
| மெ. சிதம்பரம் செட்டியார் | „ | 2 |
| சா. காசிச் செட்டியார் | „ | 2 |
| கோட்டையூர் லெ. இராமநாதன் செட்டியார் | „ | 3 |
| எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் | சங்கு | 1 |
| ப. செ. பழ. சே. | வெண்கலப்பானை | 1 |
| | இரும்பு அடுப்பு | 1 |
| கா. முத்துச் செட்டியார் | படங்கள் | 3 |
| அமராவதி புதூர் மு. அ. ஓட்டு மில் | பூந்தொட்டி | 40 |
| மதுரை P. N. சிதம்பரநாத முதலியார் | புத்தகங்கள் | 6 |
| „ V. S. சுவாமிநாதன் | „ | 10 |
| „ E. M. கோபாலகிருஷ்ண கோன் | „ | 7 |
| திருச்சி T. G. கோபால் பிள்ளை | „ | 7 |
| சென்னை M. S. சுப்பிரமணிய ஐயர் | „ | 23 |

---

## மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள்

வித்தியாசாலையின், ஏழாவதாண்டு விழாவில் மாணவ மாணவிகளுக்கு வகுப்புத்தேர்ச்சிப் பரிசுகள், நீண்டநாள் வந்தவர்களுக்குப் பரிசுகள், சுத்தமாக வந்தவர்களுக்குப் பரிசுகள், பெண்களுக்குக் கைத்தொழில் பரிசுகள் ஆகியவைகள் திருவாளர், எ. பெரி, வீர. வீரப்ப செட்டியார் அவர்களின் பொருளுதவியால் கொடுக்கப் பெற்றன.

# எட்டாவதாண்டு விழாவில் பரிசு பெறுபவர்கள்.

## வகுப்புத் தேர்ச்சிப் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 5-வது Senior வகுப்பு | முதற் பரிசு | வ. நாராயணன் |
| ,, | 2-வது பரிசு | திரு. கிருஷ்ணன் |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | ராம. வடிவேல் |
| ,, | 2-வது பரிசு | ச. இராமநாதன் |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | அள. சேவுகஞ்செட்டி |
| ,, | 2-வது பரிசு | ஸ்ரீ. ரெங்கசாமி |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | அழ. வீரப்பன் |
| ,, | 2-வது பரிசு | ராம. துரைச்சாமி |
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | பெரி. ஆண்டியப்பன் |
| ,, | 2-வது பரிசு | அ. நடராஜன் |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | க. சுப்பையா |
| ,, | 2-வது பரிசு | அழ. உலகப்பன் |

## நீண்டநாள் வந்ததற்குப் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 5-வது Senior வகுப்பு | முதற் பரிசு | திரு. கிருஷ்ணன் |
| ,, | 2-வது பரிசு | கி. ஜெகன்நாதன் |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | கி. நாராயணன் |
| ,, | 2-வது பரிசு | சோம. நாராயணன் |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | வ. வள்ளியப்பன் |
| ,, | 2-வது பரிசு | சுப. சொர்ணவல்லி |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | அழ. வீரப்பன் |
| ,, | 2-வது பரிசு | வீர. வீரப்பன் |
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. உமையாள் |
| ,, | 2-வது பரிசு | சுப. பட்டு |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | S. ஜெயராமன் |
| ,, | 2-வது பரிசு | அரு. ஏகப்பன் |

## சுத்தமாக வந்ததற்குப் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 5-வது Senior வகுப்பு | முதற் பரிசு | திரு. கிருஷ்ணன் |
| ,, | 2-வது பரிசு | சுப. உமையாள் |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. மெய்யப்பன் |
| ,, | 2-வது பரிசு | சோம. நாராயணன் |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | சுப. சொர்ணவல்லி |
| ,, | 2-வது பரிசு | கா. பாஹீரதி |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | அள. வீரப்பன் |
| ,, | 2-வது பரிசு | வீர. வீரப்பன் |
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. உமையாள் |
| ,, | 2-வது பரிசு | அரு. வள்ளியம்மை |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | அழ. உலகப்பன் |
| ,, | 2-வது பரிசு | அரு. ஏகப்பன் |

## கைத்தொழில் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 5-வது Senior வகுப்பு | முதற் பரிசு | சித. முத்தாயி |
| ,, | 2-வது பரிசு | சுப. உமையாள் |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. சீதை |
| ,, | 2-வது பரிசு | பழ. மீனுட்சி |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | கா. பாஹீரதி |
| ,, | 2-வது பரிசு | சித. பாலாம்பாள் |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | கா. விசாலாட்சி |
| ,, | 2-வது பரிசு | ஆரு. அழகம்மை |

# புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்திரக் கணக்கு.

**1939-௵ ஏப்ரல்-௴ 15-௳ முதல் 1940-௵ மார்ச்சு-௴ 31-௳ வரை.**

| விபரம் | வரவு | | | பற்று | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ | அ | பை | ரூ | அ | பை |
| ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை கமிட்டி வரவு .... | 500 | 0 | 0 | | | |
| அரசியலார் நன்கொடை வரவு 38–39ம் வருடத்திற்குகிராண்டு | 373 | 0 | 0 | | | |
| ஷெயார் வரவு 39—40ம் வருடத்திற்கு கிராண்டு .... | 944 | 0 | 0 | | | |
| பெற்றோர்கள் நன்கொடை வரவு ... | 405 | 0 | 0 | | | |
| கைத்தொழில் சாமான் கொள்முதல் பற்று | | | | 3 | 3 | 3 |
| பெற்றோர்கள் சங்கச் சிலவு .... | | | | 21 | 9 | 6 |
| பிராவிடெண்டு பண்டு சிலவு .... | | | | 8 | 0 | 0 |
| சம்பளச் சிலவு .... | | | | 1980 | 3 | 3 |
| தபால் சிலவு ... | | | | 8 | 9 | 9 |
| ஸ்டேஷனரி சிலவு .... | | | | 54 | 8 | 0 |
| சிலவு .... | | | | 120 | 7 | 3 |
| குறிப்பு இருப்பு .... | | | | 25 | 7 | 0 |
| ஆக வரவு பற்றுக்கூடியது .... | 2222 | 0 | 0 | 2222 | 0 | 0 |

# புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக் கமிட்டியின் வருடாந்திரக் கணக்கு.

வெகுதானிய-ஞு பங்குனி-மீ 31-உ முதல்
பிரமாதி-ஞு பங்குனி-மீ 30-உ வரை.

| விபரம் | வரவு | | | பற்று | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ | அ | பை | ரூ | அ | பை |
| ஸ்ரீ விநாயகர் வரவு ... | 3 | 12 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு .... | 1 | 0 | 0 | | | |
| ஆதாய வரவு .... | 623 | 1 | 0 | | | |
| நன்கொடை வரவு ... | 26568 | 1 | 10 | | | |
| ச. வி. நாடகக் கழகத்தார் வரவு .... | 893 | 13 | 3 | | | |
| செட்டிநாடு ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்களின் பரிசுநிதி வரவு .... | 518 | 7 | 9 | | | |
| சாமான் கொள்முதல் பற்று | | | | 1232 | 1 | 1 |
| வித்தியாசாலைக் கட்டிட பற்று .... | | | | 24180 | 12 | 0 |
| பெரி. வீர. ராம. பற்று .... | | | | 255 | 0 | 0 |
| பெரியகோட்டை கரு. செல்லத்தேவன் அம்பலம் பற்று .... | | | | 15 | 0 | 0 |
| புக்ஸ்டால் பற்று ... | | | | 55 | 0 | 0 |
| ஸ்ரீ சரஸ்வதி சங்கம் பற்று .... | | | | 100 | 0 | 0 |
| புதுவயல் தபாலாபீஸ் சேவிங்ஸ் கணக்கு பற்று .... | | | | 1088 | 11 | 0 |
| காரைக்குடி இந்தியன் பாங் சேவிங்ஸ் கணக்கு பற்று .... | | | | 518 | 7 | 9 |
| கைமாத்து பற்று .... | | | | 16 | 0 | 0 |
| ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை பற்று | | | | 700 | 0 | 0 |
| சிலவு ... | | | | 369 | 8 | 0 |
| குறிப்பு இருப்பு .... | | | | 77 | 12 | 0 |
| ஆக வரவு பற்றுக்கூடியது .... | 28608 | 3 | 10 | 28608 | 3 | 10 |

உ

சிவமயம்.

# புதுவயல்

# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை

# நிர்வாகக் கமிட்டியின்

# அறிக்கை.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இச்சங்கத்தின் சார்பில் ஆரம்பிக்கப்பெற்று நடைபெற்றுவரும் இவ்வித்தியா சாலையை நிர்வகித்துவரவும், இதை சிறந்த முறையில் ஒரு உயர்தரப் பாடசாலையாக (High School) நடாத்த வேண்டுமென்ற நோக்கத்துடனும், சாளது பிரமாதி ஆண்டு சித்திரைத் திங்கள் 20-ம் நாள் (3—4—1939) இக்கமிட்டி ஆரம்பிக்கப்பெற்று அதன் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிறது.

| | | |
|---|---|---|
| தலைவர் | திருவாளர் | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார். |
| காரியதரிசி | ,, | பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் (Manager & Correspondent.) |
| உப-காரியதரிசி | ,, | மெ. சிதம்பரம் செட்டியார். |

அங்கத்தினர்கள்.

| | |
|---|---|
| திருவாளர் | பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார். |
| ,, | அ. ப. சி. வீர. சின்னையா செட்டியார். |
| ,, | SP. வீரப்ப செட்டியார். |
| ,, | வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார். |

## வித்தியாசாலையின் புதிய கட்டிடத் திறப்புவிழா

பிரமாதி ஆண்டு சித்திரைத் திங்கள் 11-ம் நாள் (24–4–1939) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு செட்டிநாடு, கனம் டாக்டர், ராஜா சர், சா. ராம. மு. அ. அண்ணாமலை செட்டியார், K.T.,L.L.D., அவர்களால் கட்டிடத் திறப்புவிழாச் செய்யப் பெற்றது.

## மகேஸ்வர பூஜை

பிரமாதி ஆண்டு, சித்திரைத் திங்கள் 12-ம் நாள் பகல் 12-மணிக்கு வித்தியாசாலைக் கட்டிடத்தில் வேலை பார்த்த தச்சு, கொத்து, சித்து வகையரு ஜனங்களுக்கு பகல் உணவு அளிக்கப் பெற்றதும், சந்தண தாம்பூலத்துடன் ஆண்களுக்கு வேஷ்டியும், பெண்களுக்கு புடவையும் வழங்கப்பெற்றது.

---

## வித்தியாசாலைக் கட்டிடத்திற்கு நன்கொடை உதவியவர்கள்.

| | | | ரூ. | அ | பை |
|---|---|---|---|---|---|
| திருவாளர் | பெ. ப. வி. அரு. ராம. | .... | 17186 | 13 | 3 |
| ,, | பெரி. வீர. ராம. | .... | 2511 | 12 | 6 |
| ,, | எ. பெரி. வீர. வீர. | .... | 1601 | 0 | 0 |
| ,, | காரைக்குடி குப. சு. அ. மெ. வரவு சாய்வுநாற்காலி மேஜை செய்வதற்காக | | 600 | 0 | 0 |
| ,, | செ. மெ. சி. | .... | 251 | 0 | 0 |
| ,, | எ. பெரி. வீர. சோ. | .... | 251 | 0 | 0 |
| ,, | எ. பெரி. வீர. பழ. | .... | 250 | 0 | 0 |
| ,, | ப. வடு. வி. நா. வீர. | .... | 201 | 0 | 0 |
| ,, | மு. ப. வீர. பழ. வி. | ... | 201 | 0 | 0 |
| ,, | ராம. வெ. ராம. வெ. | .... | 201 | 0 | 0 |
| ,, | சு. சித. பழ. அழகம்மை ஆச்சி வரவு மின்சாரவிளக்கு அமைப்பிற்காக | | 201 | 0 | 0 |
| ,, | ராம. அழ. | ... | 201 | 0 | 0 |
| ,, | அ. சு. நா. சுப. நா. | ... | 200 | 0 | 0 |
| ,, | பழ. மு. பழ. | ... | 200 | 0 | 0 |
| ,, | கோட்டையூர். அ. க. லெ. அ. நா. அள. அண. | ... | 101 | 0 | 0 |
| ,, | ப. செ. பழ. சே. | ... | 101 | 0 | 0 |
| ,, | அ. ப. சி. மு. சி. | ... | 101 | 0 | 0 |
| ,, | சு. வீர. மெ. வீர. | .... | 51 | 0 | 0 |
| ,, | பழ. ப. ப. வீர. | ... | 51 | 0 | 0 |
| ,, | ப. மு. நா. மு. | ... | 51 | 0 | 0 |
| ,, | கு. வீர. பெரி. சித. ராம. | ... | 51 | 0 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருவாளர் | கு. வீர. கு. ராம. வீர. | ... | 50 | 0 | 0 |
| ,, | கண்டனூர். சித. பழ. ராம. | ... | 50 | 0 | 0 |
| ,, | சித. வயி. | .... | 41 | 0 | 0 |
| ,, | அழ. கு. சித. கும. சுப. | | 31 | 0 | 0 |
| ,, | நத்தலின், அழ. கு. சித. | .... | 25 | 0 | 0 |
| ,, | அரு. உ. வீர. அழ. | .... | 21 | 0 | 0 |
| ,, | பெரி. அரு. பெரி. | .... | 21 | 0 | 0 |
| ,, | கு. வீர. பழ. அ. | .... | 15 | 0 | 0 |
| ,, | நத்தலின், அ. ராம. சித. | .... | 10 | 0 | 0 |
| ,, | ,, அ. பழ. | .... | 10 | 0 | 0 |
| ,, | ஓ. சிறுவயல், பெரி. சு. | .... | 10 | 0 | 0 |
| ,, | ப. செ. பழ. வீர. | .... | 7 | 0 | 0 |
| ,, | நத்தலின், நா. மு. | .... | 5 | 0 | 0 |
| ,, | ,, பி. அ. வீர. அரு. | .... | 5 | 0 | 0 |
| ,, | பள்ளத்தூர், ப. ராம. ப. சு. பழ. | .... | 5 | 0 | 0 |
| ,, | மீஞ்சான், உ. அ. பெரி. மு. அரு. | | 5 | 0 | 0 |
| ,, | ,, அரு. மு. வீர. | .... | 5 | 0 | 0 |
| ,, | அ. சு. பழ. சு. சோம. | .... | 5 | 0 | 0 |
| ,, | மீஞ்சான், ராம. மீ. | .... | 3 | 0 | 0 |
| ,, | ,, வீர. கரு. ச. | .... | 2 | 0 | 0 |
| ,, | ,, உ. மு. | .... | 2 | 0 | 0 |
| ,, | மீன்மு, கா. சு. பழ. அ. | .... | 2 | 0 | 0 |

ஆகியவர்கள் நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்கட்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## போஷகர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| திரு. | பெ. ப. கி. அரு. வெள்ளச்சி ஆச்சி | .... | ரூ. | 390 |
| ,, | பெ. ப. கி. அரு. இராமசாமி செட்டியார் | .... | ,, | 240 |
| ,, | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் | ... | ,, | 240 |
| ,, | பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் | .... | ,, | 240 |
| ,, | எ. அ. ப. வீர. பழநியப்ப செட்டியார் | .... | ,, | 60 |
| ,, | வீர. பழநியப்ப செட்டியார் | .... | ,, | 25 |
| ,, | வீர. சோலையப்ப செட்டியார் | .... | ,, | 25 |
| ,, | ப. வடு. கி. நா. வீரப்ப செட்டியார் | .... | ,, | 25 |
| ,, | ராம. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியார் | | ,, | 25 |
| ,, | ராம. அழ. கிருஷ்ணப்ப செட்டியார் | .... | ,, | 25 |

| | | | |
|---|---|---|---|
| ,, | வீர. பழ. விஜேந்திர்த்தான் செட்டியார் | ... ,, | 25 |
| ,, | மெ. சிதம்பரம் செட்டியார் | .... ,, | 25 |

ஆகியவர்கள் பிரமாதி ஆண்டில் நன்கொடை உதவி யுள்ளார்கள். அவர்கட்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## நன்கொடை

பெரி. வ. வீர. வ. ரூ. 50 நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்கட்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## செட்டிநாடு ராஜா அவர்களின் பரிசு நிதி

நமது வித்தியாசாலையில் கல்வி பயிலும் தனவணிக மாணவ மாணவிகளில் தமிழ், தமிழ்க்கணக்கு, ஆங்கிலம், சங்கீதம் இவைகள் ஒன்றில் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் ஒருவருக்கு வருடந் தோறும் ஒரு பொற்பதக்கம் பரிசு கொடுப்பதற்கு நிதியாக ரூ. 500-ம், நாளது வருடத்தில் ஷை பொற் பதக்கம் ஒன்று பரிசு கொடுப்பதற்காக ரூ. 25-ம் பிரமாதி ஆண்டு சித்திரைத்திங்கள் 11-ம் நாள் (24—4—39) உதவியுள்ளார்கள். அவர்கட்கு எங் களது நன்றி உரியதாகுக.

---

## பொற்பதக்கம் பரிசு

வெகுதான்ய ஆண்டில் தமிழ்க் கணக்கில் முதன்மையாகத் தேறிய 6-வது வகுப்பு தனவணிக மாணவி சே. உமையாளுக்கு நாளது பிரமாதி ஆண்டு ஆவணித்திங்கள் 26-ம் நாள் (11-9-1939) காரைக்குடி முனிசிபல் கமிஷனர் T. புருஷோத்தமன் அவர்கள் தலைமையில் ரூ. 25-ல் செட்டிநாடு ராஜா அவர்களின் பொற் பதக் கம் பரிசு கொடுக்கப்பெற்றது.

---

## வேண்டுகோள்.

அறிவு அனைவர்க்கும் பொது. ஆயினும் அதை மக்கள் உணரச்செய்யும் வழியை செயலில் காட்ட அழைப்பது எளிதன்று. இன்று மேனாட்டிற் கல்விப்பஞ்சம் இல்லாது மக்கள் அறிவுச்செல்வம் பெற்றதற்குக் காரணங்கள் பல உண்டு. ஆயினும் அந்நாட்டு மக்கள் கல்வி கற்பதில் பரம்பரையாக தளராத ஊக்கத்துடன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றார்கள். நம்நாடோ பஞ்சப்பிணியும், அறியாத்தன்மையும் மலிந்து, எந்நாட்டு மக்களின் கல்விப் பெருக்கிற்கும் முன்னிற்க முடியாது புறமுதுகு காட்டுகின்றது. செல்வத்துள் கல்விச் செல்வமே கருத்தனம். பொருட் செல்வம் நிலையற்றது. பாமர மக்களின் அறிவுக் கண்ணைத் திறந்தாலன்றி நவயுகத்திற் புகுதல் எளிதன்று. தேசப்பற்றில் ஊறிய கவி பாரதியார் நெஞ்சு குமுற, தன் நாட்டின் வீழ்ச்சியை எண்ணி மனம் புண்ணாகி, வீதிகள்தோறும் பள்ளித்தலம் அமைக்க வேண்டுமென்ற கட்டளையை மிகுந்த சக்தியோடு எழுப்பி இருக்கின்றார், ஏன்? முற்காலத்தில் உன்னத நிலையிலிருந்த இந்நாட்டின் பெருமையை மானஸீகமாக உணர்ந்த மூதறிவாளர் இதயம் ஏன் கொந்தளித்துக் கொதிக்காதிருக்கும்? பிற்கால சந்ததியின் முற்போக்கை கருத்தில் கொண்டு நாம் என்ன செய்ய வேண்டும்? பார்க்குமிட மெல்லாம் நீக்க மற நிறைகின்ற கல்விச் செல்வத்தை வானளாவும் உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டாமா? நம் நாடு அறிவுச்சுடர் பரப்ப ஆசைகொள்ள வேண்டாமா? எழுத்தறிவற்ற இந்திய மக்கள் ஈண்டில்லை என்று நிரூபிக்க வேண்டாமா? ஆம். வேண்டும் வேண்டும், இன்றே விழித்தெழுவோம், நன்றே கடமை யுணர்ந்து அறிவுத்தொண்டாற்றுவோம் என்று முழங்குங்கள்.

இன்று நம் நாடு வேண்டும் தேவைகள் பலவற்றுள் முதன்மையாய் நிற்கும் கல்வித்தொண்டில் நமது வித்தியாசாலை சிறுகச் சிறுகப் பெருகி அரிய தொண்டுசெய்து வந்திருக்கின்றது. அன்பிதய நோக்கு, ஆர்வம், உழைப்பு இவை ஒன்று திரண்டு உருவாகியதுதான் நமது ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையிற் காணும் முற்போக்குச் சக்திகள் என்றால் ஒருக்காலும் மிகையாகாது. ஒரு சில மாணவ மாணவிகள் கொண்டு ஆரம்பிக்கப் பெற்ற இவ்வித்தியாசாலை இன்று நிலையான மாளிகையில் நிகழ்ந்து அரசாங்க

அங்கீகாரம் பெற்று, நாற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் கொண்ட உன்னதக் கலாசாலையாக விளங்குவது அன்பர்களின் ஆர்வத்தையே குறிக்கின்றது. உண்மைத்தொண்டு செய்யும் அகத் தூய்மையுள்ள அன்பர்களின் திருப்பணியை எண்ணுந்தோறும் அன்புசுரக்காத இதயம் இராதென்று துணிந்து கூறலாம். முன் னேற்றத்திலேயே கருத்தூன்றி காரியம் செய்யும் அன்பர்கள் வித்தியாசாலைக்கு தங்கள் குழந்தைகளை கல்விப்பயிற்சிக்கு அனுப்பி சிலநாளில் ஹைஸ்கூல் ஆக்குதற்கு ஊக்கம் தந்து உதவ வேண்டு கின்றோம். தரும சிந்தனையுடைய அன்பர்கள் பொருளுதவி, ஆர்வம், தொண்டு, ஆதாவு இவற்றால் நமது சங்கத்தையும், வித்தியா சாலையையும் வளர்ச்சி அடையச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளு கிறோம்.

---

## நன்றியறிவித்தல்.

நமது சங்கமும் வித்தியாசாலையும் வளர்ந்தோங்கிவா வேண்டு
மென்ற பேரவாவினால் தங்களுடைய வேலைகளை எல்லாம் பொருட்
படுத்தாது ஊக்கங்கொண்டு உழைத்துவரும் அங்கத்தினர்களுக்கும்,
அபிமானிகளுக்கும், பெரியோர்களுக்கும், விழாக்களில் பொருளு
தவி செய்துவரும் அன்பர்களுக்கும், வித்தியாசாலையின் வளர்ச்சி
கருதி பொருளுதவி செய்துவரும் அரசாங்கத்தாருக்கும், போஷ
கர்களுக்கும், புத்தகங்கள், பத்திரிகைகள், சாமான்கள், நன்
கொடைகள் முதலியது உதவிய அன்பர்களுக்கும், தாய்மார்களுக்
கும், ஆண்டு விழாவில் அன்பர்களுக்குக்கொடுக்க விசிறிகள் உதவி
வரும் நேமத்துப்பட்டி மு. சி. பழ. பழனியப்ப செட்டியாரவர்
களுக்கும், 17-வது ஆண்டு விழாவில் சாப்பாடு நடத்துவதற்கு வீடு
உதவிய அரு. உ. குடும்பத்தாருக்கும், ஆண்டு விழாக்களிலும்,
மாதக் கூட்டங்களிலும் தலைமை தாங்கிய அறிஞர்களுக்கும்,
விரிவுரைகள் நிகழ்த்திய அறிஞர்களுக்கும், சங்கம், வித்தியா
சாலை இவைகளைப் பார்வையிட்டு நல்லுரை வழங்கிய பெரியார்
களுக்கும், ஊக்கத்துடன் கல்வி போதித்துவரும் வித்தியாசாலை

ஆசிரியர்களுக்கும், பிள்ளைகளைத்தினந்தோறும் தவறாது கல்வி பயில அனுப்பிவரும் பெற்றோர்களுக்கும், நமது நிகழ்ச்சிகளை தாமதியாது பிரசுரித்துவரும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும், வித்தியாசாலை மாணவ மாணவிகள் விளையாடுவதற்கு இடம் தந்துதவிய பெரி. நா. வெங்கிடாசலம் செட்டியாரவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## அபிப்பிராயம் தந்தவர்கள்.

ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின்முன் தேசியக் கொடியை ஏற்றுவிக்கும் பாக்கியம் இன்று எனக்குக் கிடைத்தது. அழகிய கட்டிடம் ஒன்று புதிதாய் கட்டப்பட்டிருக்கிறது. இந்த வித்தியா சாலையின் அழகு பெருகுமென எண்ணுகிறேன்.

(ஒப்பம்) S. ராமநாதன்,
சென்னை அரசாங்க
விளம்பர இலாகா மந்திரி.

23—4—39

மந்திரி ராமநாதன் அவர்களுடனும் கூடவந்து வித்தியாசாலையின் கட்டிடத்தின் அழகைப் பார்த்தவுடன், சென்ற ஆண்டு வித்தியாசாலையில் நானும் கலந்துகொண்டு வருடக் கொண்டாட்டத்தைப் பார்த்தேன். இவ்வாண்டு வருடக் கொண்டாட்டத்திலும் கலந்துகொள்ளும் பாக்கியம் பெற்றேன். வித்தியாசாலையின் நிர்வாகம், உபாத்தியாயர்களின் போதனை, மாணவ மாணவிகளின் திறமைகளைப் பார்த்து அளவிலா மகிழ்வெய்துகிறேன். கடவுள் கிருபையால் மென்மேலும் சிறப்பாக நடக்கப் பிரார்த்திக்கிறேன்.

(ஒப்பம்) ஆரு. ஆ. ராம. சோக்கலிங்கம் செட்டியார்.
25—4—39.

ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை என்னும் கல்வி நிலையத்தைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தேன். அதன் அருமையும், பெருமையும் எவரும் இன்புறத்தக்க நிலையில் இனிதமைந்துள்ளன. இதில் பயின்றுவருகிற மாணவர் மாணவிகள் பல துறையிலும் நன்கு பயிற்றப் பெற்றிருக்கிறார்கள். கும்மி, கோலாட்டம், கணிதம், பரதம் பாட்டு முதலிய இன்ப நலங்கள் பல அன்பூரக் கற்று அமைதியுடன் நிலவியுள்ளார். ஒவ்வொரு துறையிலும் ஆசிரியர்கள் மிகவும் கவனித்துப் போதித்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அன்பு ததும்பிய உண்மை உழைப்புகள் உவந்து பாராட்டற்பாலன.

தரும நிலையமான இத்தகைய அழகிய வித்தியாசாலையை ஆர்வத்துடன் ஆதரித்துவரும் புண்ணிய சீலர்களுடைய மனநிலை மிகவும் எண்ணி மகிழ்தற்குரியது. இந்தக் கல்வி நிலையம் மேலும் மேலும் நன்கு நடைபெற்று வரும்படி எம்பெருமான் திருவருளை சிந்தித்து நிற்கிறேன்.

இங்ஙனம்,
(ஒப்பம்) ஜெகவீரபாண்டியன்.
26—4—39

---

புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக்கென்று பெரும் பொருட் செலவில் மிக அழகாக அமைக்கப் பெற்றிருக்கும் கட்டிடத் திறப்புவிழாவில் கலந்துகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் நோக்கமும், இந்த வித்தியாசாலையின் போதனுமுறையும் மிகவும் போற்றத்தகுந்ததாகும். இங்கு பயிற்சியுறும் மாணவமாணவிகள் பிற்காலத்தில் தேசநலத்திற்கு மிகவும் உபயோகமுள்ளவர்களாக விருப்பார்களென்பது எனது நம்பிக்கை. மனசும், பொருளும் பெற்றுள்ள பிரமுகர்கள் பலர் இந்தச் சங்கத்திலும், வித்தியாசாலையிலும் ஆர்வம் காட்டிவருவது சங்கமும் வித்தியாசாலையும் வருங்காலத்தில் மிகவும் போற்றற்குரியதாக விருக்குமென்பதற்கு அடையாளமாகும். சங்கமும் வித்தியாசாலையும் என்றும் செழித்தோங்கப் பிரார்த்திக்கின்றேன்.

(ஒப்பம்) சா. ராம. மு. அ.
அண்ணாமலை செட்டி.
1—5—39.

சரசுவதி நிலையத்தின் இந்தத் திங்கள் கூட்டங்களின் முதல் கூட்டத்திலிருந்தாலும், எனது நண்பர்கள் டி. கே. சி., ரா. பி. சே. அவர்களும் கலந்துகொள்ளும் நற்செய்தி பெற்றோம். இச்சங்கம் வெகு சிறப்பாக நடந்து வருவதையும் அதனால் ஆடவரும் பெண் மணிகளும் மிக்க பயனைப்பெற்றுவருவதையும் கண்டு மகிழ்ந்தோம். இக்கூட்டத்தில் படிப்பு முறையைப்பற்றிச் சில சொற்கள் சொல்ல வும் எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு ஆண்டு அளவில் ஒரு சிறந்த கட்டிடத்தைத் தொடங்கி முடித்து அதில் பாட சாலையை நிறுவி திறப்புவிழா நடத்தினதையும் கண்டு மிகவும் வியந்தேன். இப்பாடசாலை இவ்வூர்ச் சிறுமியர், சிறுவர்களுக்கு மிகுந்த பயனைக் கொடுத்து உதவுகிறது. கடவுள் அருளால் இச் சங்கமும், பாடசாலையும் பல ஆண்டுகளாக விருத்தியாகி நீடூழி வாழ்வதாக.

(ஒப்பம்) ம. இராமச்சந்திரன்,

15—5—39. கோவைக் கல்விச்சங்கத் தலைவன்.

---

15—5—39 இன்று சரஸ்வதி வித்யாசாலையைக் கண்டு மகிழ் வுற்றேன். இக்கல்லூரி சென்ற பல ஆண்டுகளாக வளர்பிறை போல் வளர்ந்து வருதலை நான் நன்கறிவேன். புதுவயல் அறிஞர் கூட்டுறவாலும், ஆர்வத்தாலும் நடைபெறுகின்ற சரஸ்வதி சங்க மும், வித்தியாசாலையும் இவ்வாண்டில் நல்லதோர் நிலையம் பெற் றிருக்கின்றன. இந்நிலையம் அறிவுக்களஞ்சியமாக என்றும் நின்று நிலவுமாறு இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

(ஒப்பம்) ரா. பி. சேதுப்பிள்ளை.

---

நண்பர்களுடன் வந்து பார்த்தது ரொம்ப சந்தோஷம்.

15—5—39 (ஒப்பம்) டி. கே. சிதம்பரநாத முதலியார்.

---

## மொழி பெயர்ப்பு.

நான் இன்று இப்பள்ளிக்கூடத்தை வந்து பார்வையிட்டேன். 6. உபாத்தியாயர்களும், 130/138 குழந்தைகளும் வந்திருக் கிறார்கள். ஆதித்திராவிட மாணவர்கள் குறைவா யிருந்தபோ திலும், 65 பெண் குழந்தைகள் படிப்பது குறிப்பிடத் தக்கதாகும்.



ESTD. 1928.

சுதேசி ஓடுகளில் சிறந்த

## குதிரை

## பவுன் மார்க்

ஓடுகளையே வாங்குங்கள்!


பரப்போடு, முகட்டோடு, சீலிங் ஓடு,
பூக்கல்லு, காத்தோடு,
கண்ணாடி ஓடு, சதுரக்கல் வகையரு சாமான்கள்

## காரைக்குடியில்

எல்லா மரக்கடைகளிலும்
சகாயமான விலைக்கு கிடைக்கும்.

---

இந்திய மூலதனம்! இந்தியக் கைத்தொழில்!!



செங்கலில் சிறந்த


## மேஜை

செங்கலையே
வாங்குங்கள்

8×9 இஞ்சியில் பல தினுசுகளில்
சகாயமான விலைக்குக் கிடைக்குமிடம்:—

# மூ. அ. ஓட்டு மில்,

முனிஸிபல் சப்ளையர் :: அமராவதி புதூர்.



# இண்டோ பர்மா

## டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட்,

**Dealers in B.B.T.C. Ltd., Productions,**

I. B. T. C. L. பில்டிங்ஸ்,

செக்காலைரோடு, காரைக்குடி.

—:0:—

டிப்போக்கள்:— காரைக்குடி & தொண்டி.

---

எங்களிடம் கட்டிடங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான, பம்பாய் பர்மா கம்பெனி (லிமிடெட்) தேக்கு மரங்கள், சைஸ் ரிப்பர்கள் வகையறாவும், ஓடு, சதுரக் கற்களும் ஸ்டாக் இருக்கிறது. கட்டிட ஆர்டர்களுக்கு குறித்த நேரத்தில் சப்ளை செய்யக்கூடும்.

வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்பெறும்
பொதுஜனங்களின் ஆதரவைப் பெரிதும் விரும்புகிறோம்

★ ஸ்டார் மார்க் ஓடு, சதுரக்கல்களின் சோல் ஏஜண்டு
தொண்டியிலும் ஏராளமான மரங்கள் ஸ்டாக் இருக்கின்றன.

P.S. மணி அய்யர், துபாஷ். SN.VR.CT. சின்னஞ்செட்டியார் மானேஜிங் டைரெக்டர்.

## சுகமான வாழ்க்கைக்கு!

எலக்டிரிக் வசதிகள்,

எல்லாவிதமான வயரிங் சாமான்கள், 'ஸீலிங்' டேபிள் விசிறிகள், சுதேசி, இங்கிலீஷ், ஜெர்மன் பல்புகள் அழகிய லைட்பிட்டிங்குகள்.

தண்ணீர் சப்ளை,

"மயர்ஸ்", "கிர்லாஸ்கர்" தண்ணீர்ப்பம்புகள், "ஜி. இ. ஸி." "கான்ஸ்" "கிராம்டன்" மோட்டார்கள், ஷெ பம்பு செட்டுகள்.

சோபா, டேபிள், சேர், படுக்கைக் கட்டில்கள், குழந்தைத் தொட்டில்கள்.

நாகரீகமான கடிதப்போக்குவரத்து,

தமிழ், இங்கிலீஷ் டைப்ரைட்டர்கள்.

கட்டிடங்களுக்கு அவசியமான சாமான்கள்,

இரும்பு, கர்டர், வளைவுதகடு, சாதாத்தகடு, டைமன் வலை, பெயிண்ட், வார்னிஷ் சாமான்கள், பித்தளைத்தகடு, செப்புத் தகடு, கம்பிகள், குழாய்கள் முதலிய எல்லாச்சாமான்களும் மிகவும் சகாயமான விலைக்கு எங்களிடம் கிடைக்கும்.

### ஸௌத் இந்தியா கார்ப்பரேஷன் (மதராஸ்) லிமிடெட்,

தந்தி:- LOTUS காரைக்குடி டெலிபோன் No. 41


நகரத்தார் பிரஸ், கண்டனூர்.